

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, நேற்று (23.09.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு72க்குட்பட்ட புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன இறைச்சிக் கூட கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – ஆவடி சா.மு.நாசர் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திமுகவினர் உறுதி மொழி ஏற்பு!

திருவள்ளூர் செப் 24;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், மாவட்ட கழக நிர்வாகிகள் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ். மணி மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன், ஆகியோர் வரவேற்புரை யற்றினார் பொதுக்குழு உறுப்பினர்கள் பரிமளம் விஸ்வநாதன், பி.வெங்கடாஜலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராம் மூர்த்தி, ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் நா.செல்வசேகரன், மு.முரளிதரன், ஆ.ராஜா, வே.ஆனந்தகுமார், தே.உதயசூரியன், கா.சு. ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், பி.முத்து, மீ.வீ.கோதண்டம், நா.மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் கீழ் 1 கோடி குடும்பங்கள் திமுகவில் இணைந்துள்ளன என தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல் குளறுபடி, தொகுதி சீரமைப்பில் தமிழ்நாட்டின் பிரதிநித்துவதை குறைக்க அனுமதிக்க மாட்டோம் உட்பட 5 உறுதிமொழிகளை அமைச்சர் மா.சுப்ரமணியன், ஆவடி சா.மு.நாசர் வாசிக்க, கூட்டத்தில் பங்கேற்ற 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திமுகவினர் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் உறுதி மொழி ஏற்றனர்கள்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பேசியதாவது.

கடந்த 2 ஆண்டுகளாகவே 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெல்வோம் என முழங்கி வருகிறோம் எனவும், இதனை கண்டு சிலர் இவர்களுக்கு அதீத நம்பிக்கை என சிலர் விமர்சிக்கின்றனர் எனவும், ஆனால் இது விஞ்ஞான பூர்வ அறிவிப்பு என தெரிவித்தார். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது, 221 தொகுதிகளில் திமுக கூட்டணி கூடுதல் வாக்குகளை பெற்றது எனவும், இதன் மூலம் 200 தொகுதிகளை வெல்வோம் என கூறுவதில் என்ன தவறு உள்ளது என கேள்வி எழுப்பினார். கடந்த பாராளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி 13 தொகுதிகளில் மட்டுமே வாக்குகளை குறைவாக பெற்றது எனவும், தற்போது எடப்பாடி பழனிசாமி ஆங்காங்கே பேனர் வைத்து மக்களை அழைத்து வந்து பேசுகிறார் எனவும், 2000, 3000 பேர் மட்டுமே வாக்களித்து ஒரு தொகுதியில் வெற்றி பெற்று விட முடியுமா, டெபாசிட் கூட வாங்க முடியுமா என வினவிய அமைச்சர் மா.சு, தற்போது வீர வசனம் பேசி வரும் எடப்பாடி பழனிசாமி தலைமை வகிக்கும் அதிமுக கடந்த பாராளுமன்ற தேர்தலில் 8 தொகுதிகளில் மட்டுமே கூடுதல் வாக்குகளை பெற்றது எனவும், தேமுதிக, பாமக ஆகிய கட்சிகள் எஞ்சிய 5 தொகுதிகளில் திமுகவை விட கூடுதல் வாக்குகளை பெற்றதாக கூறினார். முதலமைச்சரின் முக்கிய திட்டங்களில் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 1 கோடியே 15 லட்சம் பெண்கள் மாதந்தோறும் 1000ரூபாய் பெற்று வருவதாகவும், தற்போது வரையில் ஒவ்வொரு மகளிரும் 25000 ரூபாய் பெற்று பயனடைந்துள்ளனர் என பெருமிதம் தெரிவித்தார். விடுபட்ட அனைவருக்கும் விரைவில் கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார் என்றும் தமிழ்நாட்டை பின்பற்றி பல மாநிலங்கள் இதே வாக்குறுதியை அறிவித்த நிலையில் மற்ற மாநிலங்கள் முறையாக செயல்படுத்த முடியாமல் உள்ளதாகவும், ஆனால் தமிழ்நாட்டில் இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என தெரிவித்தார்

கலைஞர் ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 13.12% எட்டியது எனவும், அதன் பின்னர் அதிமுக ஆட்சி காலத்தில் சரிந்து 6%, 7% மட்டுமே இருந்தது எனவும், சுமார் 10 ஆண்டுகள் அதல பாதாளத்தில் இருந்த நிலையில் தற்போது தமிழ்நாடு 11.19% என பொருளாதார வளர்ச்சியை மீண்டும் முன்னோக்கி தமிழ்நாட்டின் முதலமைச்சர் கொண்டு வந்துள்ளார் என்றும், இந்திய அளவில் 6.5% மட்டுமே உள்ள நிலையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முதலமைச்சர் சிறப்பான ஆட்சியின் மூலம் உயர்த்தி காட்டியுள்ளதாக தெரிவித்தார். உங்களுடன் ஸ்டாலின், மக்களை தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்களின் மூலம் ஏராளமான மக்கள் பயனடைந்து வருகின்றனர் எனவும், மக்களை தேடி மருத்துவம் திட்டத்திற்கு கடந்தாண்டு ஐநா சபை பாராட்டி விருது வழங்கியது எனவும், இனி மருத்துவமனைகளுக்கு வருவோரை நோயாளிகள் என அழைக்க கூடாது எனவும், மருத்துவ பயனாளிகள் என்று மட்டுமே அழைக்க வேண்டும் என முதலமைச்சரின் உத்தரவின் பேரில் அரசாணை வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதில் கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ, தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதீக், தலைமை செயற்குழ உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, எல்லாபுரம் டி.ஜே.மூர்த்தி, மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ராபர்ட் ராஜா, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த்குமார், ந.பரிமளம், மு.மணிபாலன், ஆ.சத்தியவேலு, ஜான்பொன்னுசாமி, அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், நிர்வாகிகள் கே.வி.லோகேஷ், வெற்றி(எ) ராஜேஷ், என்.கிருஷ்ணமூர்த்தி, முகமது அலவி, க.சம்பத், ஏ.கே.சம்பத், ஜி.பி.வெங்கடேசன், ரோஸ் பொன்னையா, ரவிக்குமார், தனசேகர் , ஆறுமுகம், தேசராணி, பாஸ்கரன், சுமன் , கோபி, ரமேஷ், ஜெயலலிதா, ஜெ.மோகன் பாபு, சங்கர், யுவராஜ், வே.நரசிங்கமூர்த்தி, நிலவழகன், வல்லூர் பா.து.தமிழரசன், அத்திப்பட்டு எம்.டி.ஜி.கதிர்வேல், மணிமாறன், ஓட்டுனர் அணி ராஜேஷ், மா.தீபன், ஜி.டி.எம்.கார்த்திக், ராமமூர்த்தி, சிற்றரசு, உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் மீஞ்சூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ் நன்றி கூறினார்.



சைதை கிழக்குப் பகுதி 169–வது வட்டக் கழக அவைத் தலைவர் அ.ஆரி, சாலை விபத்திற்குள்ளாகி, சிகிச்சை முடிந்தது இல்லத்தில் ஓய்வெடுத்து வரும் அவரை துணை மேயர் மு.மகேஷ்குமார் நலம் விசாரித்தார். உடன் வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ், வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, 151வது வார்டில மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஸ் எம்.சி தலைமையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் பார்வையிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் தீர்செவு ய்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள்.இந்நிகழ்வில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

